மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.14/2021
அ.வ.எண்.83/2008

1. லஷ்மி
2. கமலா … மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சுந்தரராஜன் (இறந்துவிட்டார்)
2. பரிமளா (இறந்துவிட்டார்)
3. மணி (எ) சாரதா
4. சரோஜா
5. சின்னதாயி
6. கொன்றி
7. சேகர்
8. ஆணையாளர், நங்கவள்ளி பஞ்சாயத்து யூனியன்.
9. முனுசாமி
10. சுதா
11. அரவிந்த் … எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 24.08.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.மாலதி அவர்கள் ஆஜராகியும், 1,2 ம்எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 3 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151 ன் கீழ் வழக்கினை திருத்த அனுமதி வழங்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுவின் சுருக்கம் : –

மனுதாரர்களின் தாயார் கந்தம்மாள் 15.10.1958 ல் ச.எண்.277/1 டியில் 3.31 ஏக்கரில் 0.70 சென்டை கிரயம் பெற்றார். மீதியுள்ள சொத்துகள் ஆறுமுக கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். ஆனால் வழக்கு சொத்து விபரத்தில்

ச.எண்.277/1டி–ல் 3.35ஏக்கர் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நான்கெல்லை தவறானது ஆகும். எனவே அவற்றை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 3ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) 1ம்பிரதிவாதிக்கு அவரது தாயார் சொத்துகளை செட்டில்மெண்ட் செய்து வைத்த பின் அவர் அவரது மனைவியான 2ம்பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். இதில் ஒரு பகுதியை வாதிகளில் ஒருவர் விலைக்கு வாங்கினார். வாதிகள் இந்த சொத்துகளில் 70செண்ட் மட்டும் தங்கள் தாயார் பெயரில் உள்ளது எனவும், மீதிநிலம் வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி 3ம்எதிர்மனுதாரருக்கு தெரியாமல் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கை அவர்களுக்குள் தாக்கல் செய்து மறைமுகமாக இறுதிநிலைத் தீர்ப்பாணையை அ.வ.எண்.170/2012ல் பெற்றுள்ளதையும், மேலும் அ.வ.எண்.277/2017ல் 3ம்பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதையும் மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

(ii) மனுதாரர்கள் அதிக விஸ்தீரண நிலத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டதாகவும், தற்போது தான் 70 செண்ட் நிலம் மட்டுமே தங்கள் தாயார்பெயரில் உள்ளது தெரிந்ததாகவும் கூறி மனுதாக்கல் செய்துள்ள மனுதாரர்கள் முரண்தடை நீதி கோட்பாட்டின் படி தடை செய்யப்படுகின்றனர். பிரதிவாதிகளின் சட்டபூர்வமான உரிமையை முறியடிக்கவும், 2008 முதல் 13 ஆண்டுகளாக பிரதிவாதிகளை சொல்ல முடியாத அளவுக்கு துன்பப்படுத்தியும், செலவு செய்ய வைத்தும் இதுபோன்ற மனுக்களை மனுதாரர்கள் தொடர்ந்து தாக்கல் செய்து வருகின்றனர். வழக்கின் அடித்தளத்தையே அசைக்கும் வகையில் இம்மனு உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும், ஆகவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் தாயார் கந்தம்மாள் 15.10.1958 ல் ச.எண்.277/1 டியில் 3.31 ஏக்கரில் 0.70 செண்டை கிரயம் பெற்றார் எனவும், மீதியுள்ள சொத்துகள் ஆறுமுக கவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஆகவே வழக்கு சொத்துவிபரத்தில் ச.எண்.277/1 டி–ல் 3.35 ஏக்கர் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மேலும் நான்கெல்லை தவறானது எனவும், எனவே அவற்றை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் 1 ம்பிரதிவாதிக்கு அவரது தாயார் சொத்துகளை செட்டில்மெண்ட் செய்து வைத்த பின் அவர் அவரது மனைவியான 2 ம்பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் எனவும், இதில் ஒரு பகுதியை வாதிகளில் ஒருவர் விலைக்கு வாங்கினார் எனவும், வாதிகள் இந்த சொத்துகளில் 70 செண்ட் மட்டும் தங்கள் தாயார் பெயரில் உள்ளது எனவும், மீதிநிலம் வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி 3 ம்எதிர்மனுதாரருக்கு தெரியாமல் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கை அவர்களுக்குள் தாக்கல் செய்து மறைமுகமாக இறுதிநிலைத் தீர்ப்பாணையை அ.வ.எண்.170/2012 ல் பெற்றுள்ளதையும், மேலும் அ.வ.எண்.277/2017 ல் 3 ம்பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதையும் மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் எனவும், மனுதாரர்கள் அதிக விஸ்தீரண நிலத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டதாகவும், தற்போது தான் 70 செண்ட் நிலம் மட்டுமே தங்கள் தாயார்பெயரில் உள்ளது தெரிந்ததாகவும் கூறி மனுதாக்கல் செய்துள்ள மனுதாரர்கள் முரண்தடை நீதி கோட்பாட்டின் படி தடை செய்யப்படுகின்றனர் எனவும், பிரதிவாதிகளின் சட்டபூர்வமான உரிமையை முறியடிக்கவும், 2008 முதல் 13 ஆண்டுகளாக பிரதிவாதிகளை சொல்ல முடியாத அளவுக்கு துன்பப்படுத்தியும், செலவு செய்ய வைத்தும் இதுபோன்ற மனுக்களை மனுதாரர்கள் தொடர்ந்து தாக்கல் செய்து வருகின்றனர் எனவும், வழக்கின் அடித்தளத்தையே அசைக்கும் வகையில் இம்மனு உள்ளதால் இம்மனு

அனுமதிக்கத்தக்கதல்ல எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3 ம் எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுவினை பரிசீலனை செய்ததில் வழக்கு சொத்துவிபரத்தில் ச.எண்.277/1டி விஸ்தீரணம் 3.35 ஹெக்டேர் என்பதற்கு பதிலாக ச.எண்.277/1டி–ல் 0.70 செண்ட் எனவும், அதன் நான்கெல்லையும் வழக்கில் சேர்க்க கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) மனுதாரர்கள் தரப்பில் தற்போது தான் வழக்கு சொத்துவிபரத்தில் 70 செண்ட் என்பதற்கு பதிலாக 3.35 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வந்ததாக கூறியுள்ளார்கள். ஆனால் எதன் அடிப்படையில் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது என்பது குறிப்பிடவில்லை. இருந்தபோதும் 3.35 ஏக்கர் என்பதற்கு பதிலாக 70 செண்ட் என திருத்துவதாலும், அதற்கான நான்கெல்லையை குறிப்பிடுவதாலும் வழக்கின் அடிப்படை தன்மை மாறாது. மேலும் இவ்வழக்கில் தற்போது வரை வழக்கு விசாரணை ஆரம்பிக்காமல் உள்ளது தெரியவருகிறது. எனவே வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே திருத்தல் மனுவினை தாக்கல் செய்துள்ளதாலும் மேற்படி திருத்தத்தை வழக்கில் சேர்க்க மனுதாரர்களுக்கு ஓர் வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மேற்படி திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்னையை தீர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) ஆனால் 2008 ல் இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு 13 ஆண்டுகள் கழித்து வழக்கு சொத்துவிபரத்தை திருத்த மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களால் 3 ம்எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர் 3 ம்எதிர்மனுதாரருக்கு ரூ.1500/– செலவுத்தொகை அளிக்கும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/—செலவுத்தொகையாக 01.09.2021க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க 02.09.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை</u>

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.